Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 17, 2023


செவ்வாய்க்கிழமை ஜனவரி 17, 2023 | ஒளி: 08 கதிர் 188 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## உலகின் 5ஆவது பணவீக்க நாடு



அதிக பணவீக்கம் கொண்ட உலக நாடுகள் பட்டியலில் 4ஆவது இடத்தில் இருந்த இலங்கை ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியுள்ளதாக ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டுப் பொருளாதாரப் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கேயின் சமீபத்திய பணவீக்கச் சுட்டெண்ணின் அடிப்படையிலேயே இலங்கைக்கு 5ஆம் இடம்கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2



ஜெய்சங்கரிடம்

# ‘சாதகமான’ செய்தியை இந்தியா அனுப்பும்

### இரு உடன்படிக்கைகள் கைச்சாத்தாகும் கடன் மறுசீரமைப்பு குறித்தும் பேச்சு

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் எதிர்வரும் வியாழக்கிழமை (19) இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன் அவரது வருகையின் போது இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயத்தின் போது இலங்கையில் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார் என்றும் அதன்போது திருகோணமலை அபிவிருத்தி திட்டம் தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும், இந்தியாவுடன் மின்சார இணைப்புத் திட்டம் தொடர்பான மற்றும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## பசுவுடன் பாலியல் உறவு கொண்ட இளைஞர்

### மனநல அறிக்கை கோரியது நீதிமன்றம்

காணியில் கட்டி வைக்கப்பட்டிருந்த பசுவுடன் பாலியல் உறவு வைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 19 வயது இளைஞனை எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா பதில் நீதவான் மகேஷ் ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

சிறுமி வன்புணர்வு வழக்கில் விடுதலை

## ரூ.100 கோடி கோரி வழக்கு

2012ஆம் ஆண்டு சிறுமியொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக 15 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுவித்து விடுதலை செய்யப்பட்ட அக்குரஸ்ஸ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சாருவ லியனகே சுனில், சட்டமா அதிபர் மற்றும் இரண்டு பொலிஸ் அதிகாரிகளிடம் இருந்து 100 கோடி ரூபாய் நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் உரிமைக் கோரிக்கை வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

சின்னத்தேர்தலில்

## சம்பிக்க – வெல்கம கூட்டணி



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு புதிய லங்கா சுதந்திரக் கட்சியும் (நவ லங்கா நிதஹஸ் கட்சி) 43 படையணியும் நேற்று (16) இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. அதற்கமைய புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் குமார வெல்கம மற்றும் 43 படையணியின் தலைவர் பாட்டளி சம்பிக்க ரணவக்க ஆகியோர் இது தொடர்பான ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## மிடில்டனில் தீ

தலவாக்கலை– லோகி தோட்டத்தின் மிடில்டன் பிரிவில் பொங்கல் தினத்தன்று (15) ஏற்பட்ட தீ விபத்தால் 12 அறைகளைக்கொண்ட லயன் குடியிருப்பில் 7 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன. 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

## பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை



காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் முன்னெடுத்த கலந்துரையாடலில் எமக்கு நம்பிக்கையில்லை. அவர் இப்போது கூறும் கருத்தும் தொடர்சியாக வெளிப்படுத்தப்படும் கருத்தாகவே உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார். நேற்று (17) உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதலளிக்கையிலே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இரட்டை படுகொலை: இருவர் கைது

மாவனல்லை பிரதேசத்தில் இளைஞர்கள் இருவரை கொடூரமாக சித்திரவதை செய்து படுகொலை செய்து புதைத்த சம்பவத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கேகாலை குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் குழுவினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவனல்லை மற்றும் வெலிஓயா பிரதேசங்களில் வைத்தே இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## 13 வருமாயின் நாடு பிளவுபடும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வடக்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிமொழியை நிறைவேற்றினால் குறுகிய காலத்துக்குள் நாடு பிளவுபடும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தும் என்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து வடக்கு மக்களை ஏமாற்றுவதற்காகவே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளதாக ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

சொத்துக் குவிப்பு வழக்கில்

## விமலின் ஆட்சேபனை :பெப்.28இல் உத்தரவு

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று அவரது சட்டத்தரணி முன்வைத்த அடிப்படை ஆட்சேபனைகள் குறித்த உத்தரவு பெப்ரவரி 28ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, திங்கட்கிழமை (16) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## போதைப்பொருள் வியாபாரிகளின் தகவல் திரட்டல்

எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் விற்பனையை கட்டுப்படுத்த போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் நபர்களின் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

## புதிய முறையில் நீர்க் கட்டணம்



நீர்க் கட்டணங்களை புதிய முறைமையின் ஊடாக வழங்குவதற்கும் செலுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

# எம்.பிக்களின் வீடுகள் எரிப்பு குறித்த ரிட் மனு விசாரணை

### ஐஜிபி, இராணுவ தளபதி உள்ளிட்ட 18 பேருக்கு நோட்டீஸ்

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற களேபரங்களில் ஆளும்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (16) தீர்மானித்தது. மனுவின் பிரதிவாதிகளை எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2



## யாழில் “கரப்பான்பூச்சி” வடையால் பரபரப்பு



யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் வாங்கப்பட்ட வடை ஒன்றிற்குள் கரப்பான் பூச்சி இருந்த சம்பவத்தில், குறித்த உணவகத்திற்கு 80,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 04ஆம் திகதி வடையில் கரப்பான் பூச்சி இருந்ததாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து, யாழ் மாநகர பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

# போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை, கண்ணீர்ப்புகை பிரயோகம்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை விடுவிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சமூக ஆர்வலர்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் உள்ளிட்ட தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு பேரணி மீது பொலிஸாரால் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

5 மாதங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேவை விடுவிக்குமாறும் பயங்கரவாத தடைச்சட்டத்தை செல்லுபடியற்றதாக்குமாறும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட சிவில் அமைப்புகளால் கொழும்பு, தும்முல்ல பகுதியில் திங்கட்கிழமை (16) எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பேரணியை போராட்டக்காரர்களை கலைக்க கொள்ளுப்பட்டி டுப்பிளிகேசன் வீதியில் பொலிஸாரால் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அங்கு பதற்றம் நிலவியது. போராட்டக்காரர்கள் யூனியன் ப்ளேஸ் ஊடாக காலி முகத்திடலுக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் கோட்டை நீதவான் திலின கமகேவினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொம்பனித் தெரு பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், காலி முகத்திடலுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘சாதகமான’ செய்தியை இந்தியா அனுப்பும்

இந்த விஜயத்தின் போது அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இதன்போது பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து உத்தரவாதங்களைப் பெற வேண்டியுள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகை ஏனைய அனைத்து கடன் வழங்குனர்களுக்கும் இருதரப்பு மற்றும் பலதரப்பு கடன் வழங்கும் அமைப்புகளுக்கும் முக்கியமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் இந்த விஜயத்தின் போது இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் கவனம் செலுத்தப்படும் எனவும் இலங்கையின் கடனை மறுசீரமைப்பது குறித்து சாதகமான தீர்மானங்கள் எட்டப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகின் 5ஆவது பணவீக்க நாடு

டிசம்பர் மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ பணவீக்கம் 66 சதவீதமாக உள்ள போதும் இலங்கையின் உண்மையான பணவீக்கம் 106 சதவீதமாக இருப்பதாக ஹான்கே தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுட்டெண்ணில் இலங்கையின் பணவீக்கம் 101 சதவீதமாக பதிவாகியிருந்ததாகவும், புதிய சுட்டெண்ணில் 106 வீதமாக அதிகரித்துள்ள தாகவும் குறிப்பிட ப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் சிம்பாப்வே முதல் இடத்திலும் வெனிசுவேலா இரண்டாவது இடத்திலும் லெபனான் மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் உணவுப் பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளைத் தரப்படுத்தி உலக வங்கி நவம்பர் மாதம் வெளியிட்ட பட்டியலில் 6 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இம்முறை 7ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலக வங்கியின் அண்மைய உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் இந்த பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியான அறிக்கையில் இலங்கை 5ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பிக்க – வெல்கம கூட்டணி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒரு சில தொகுதிகளில் தாம் 43ஆம் படையணியாக தனித்தும், ஏனைய சில தொகுதிகளில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தும் போட்டியிடவே தாம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க எம்.பி, நாட்டை தற்போதைய வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்த ராஜபக்ஷவாத கட்சிகள் மற்றும் குழுக்களை மட்டுமே தாம் எதிரியாக கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

இதன்படி, தெரிவு செய்யப்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து 43 பிரிவு பிரதிநிதிகள் போட்டியிடவுள்ளதாகவும், அதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 13 வருமாயின் நாடு பிளவுபடும்

இது வடக்கில் உள்ள பிரிவினைவாத அரசியல்வாதிகளின் நோக்கத்துக்கு மட்டுமே உதவும் என்றும் வடக்கு மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் தெரிவித்த விமல் எம். பி, சர்வகட்சி மாநாட்டின் ஊடாக கடந்த காலத்தில் அடையத் தவறிய உடன்படிக்கைகளை தற்போது நடைமுறைப்படுத்த ஜனாதிபதி முயற்சித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி வடக்கு, கிழக்கை இணைத்து கூட்டாட்சி முறைமையை வழங்க ஜனாதிபதி, கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் முயற்சித்ததாக வீரவன்ச நினைவூட்டியுள்ளார்.

# பசுவுடன் பாலியல் உறவு கொண்ட இளைஞர்

கம்பஹா மாவட்டத்தின் வீரகுல, இஹல வீடியவத்த பகுதியில் உள்ள காணியில் கட்டிவைக்கப்பட்டிருந்த பசுவுடன் குறித்த இளைஞர் பாலியல் உறவு கொண்டதாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் வீரகுல பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தை நேரில் பார்த்த காணி உரிமையாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸார், நீதிமன்றில் தெரிவித்தனர்.

ராகம போதனா வைத்தியசாலையில் உள்ள மனநல வைத்தியரிடம் சந்தேக நபரை முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிக்கையுடன் ஜனவரி 23 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறு மஹர சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

# இரட்டை படுகொலை: இருவர் கைது

வெலிஓயா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொலை செய்யப்பட்ட இளைஞனின் மோட்டார் சைக்கிள் மற்றும் ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்விரு இளைஞர்களை கொன்று புதைத்த சம்பவத்தில் மாவனல்ல பிரதேசத்தில் பிரதான போதைப்பொருள் வர்த்தகர் என கருதப்படும் நபரையும் அவரது மூன்று தரகர்களையும் கைது செய்ய கேகாலை பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் போதைப்பொருள் கடத்தல்காரரின் தரகர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# விமலின் ஆட்சேபனை :பெப். 28இல் உத்தரவு

அமைச்சராக கடமையாற்றி காலப்பகுதியில், சட்டபூர்வமான வருமானத்துக்கு மேலதிகமாக 75 மில்லியன் ரூபாய் சொத்துக்ககள் சேர்த்துள்ளமை தொடர்பிலேயே விமல் எம்.பிக்கு எதிராக, ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதி க்குள்ளே சொத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன என்று விமல் எம்.பிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் கடந்த அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் அரச அதிகாரிகள் மாத்திரமே இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க முடியும் என்று விமல் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவீந்திர பெர்னாண்டோ, தமது அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார்.

ஆட்சேபனைகள் தொடர்பான எழுத்துப்பூர்வ சமர்ப்பணங்களை பிரதிவாதி மற்றும் முறைப்பாட்டாளர் தரப்பு சமர்ப்பித்ததுடன், ஆட்சேபனைகள் தொடர்பான உத்தரவு பெப்ரவரி 28 ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார்.

# ரூ.100 கோடி கோரி வழக்கு

பிரதிவாதிகளான பிரதான பொலிஸ் பரிசோதகர் வருணி போகஹவத்த, பொலிஸ் பரிசோதகர் லக்ஷ்மன் பதுவிதவத்த மற்றும் சட்டமா அதிபர் ஆகிய மூவரும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் வழக்குத் தொடுத்ததாக மனுதாரரான சுனில் குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது நற்பெயருக்கு சேதம் மற்றும் நீண்ட கால சிறைவாசம் மற்றும் வணிக சரிவுகளை ஏற்படுத்திய மாத்தறை மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் நடதப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்காக தனக்கு 100 கோடி ரூபாய் நட்டஈடு வழங்கவேண்டும் என்று மனுதாரர் கோரியுள்ளார்.

2012ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதிக்கும் 2012ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாருவ லியனகே சுனில் குற்றச்செயலை புரிந்துள்ளதாக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

முன்னெடுக்கப்பட்ட சாட்சிய விசாரணைக்கு அமைய குற்றவாளியாக இனங்காணப்பட்ட சுனிலுக்கு 15 வருட கடுழிய சிறைதண்டனை மற்றும் இரண்டரை இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனையை மீளாய்வு செய்து இரத்து செய்யுமாறு கோரி, குறித்த மேன்முறையீட்டை சுனில் தாக்கல் செய்திருந்தார்.

மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற சாட்சிய விசாரணையில் பாதிக்கப்பட்ட சிறுமி, மனுதாரர் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியமையை திட்டவட்டமாக மறுத்ததால் தனக்கெதிரான தண்டனையை நீடிக்க முடியாது என்று மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த மனு மீதான தீர்ப்பு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான பி.குமாரத்தினம் மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் கடந்த ஒக்டோபர் 11ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அதன்போது, குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை விசாரணை நீதிபதி, மதிப்பீடு செய்யத் தவறியதால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் தீர்ப்பை இரத்துச் செய்வதற்கு நீதியரசர்கள் குழாம் தீர்மானித்தது.

# புதிய முறையில் நீர்க் கட்டணம்

அதற்கமைய வாடிக்கையாளர்களுக்கு நீர்க் கட்டண சீட்டு வழங்கும் இயந்திரம் மூலம் மாதாந்த கட்டண தொகையை வழங்குவதுடன், வங்கி அட்டைகள் மூலம் நீர்க் கட்டணங்களை செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் பியால் பத்மநாத கூறியுள்ளார்.

இதன்படி, யாழ். மாவட்டத்தில் இந்த வேலைத்திட்டம் இன்று ( 17 ) ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த பியால் பத்மநாத, எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவித்தார்.

# பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

எந்த காலப்பகுதிக்குள் எங்கே எந்த இடங்களில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என கூறவில்லை மாறாக 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் என கூறப்படுகிறது. உடனடியாக விடுவிக்கப்படலாம் என நீண்டகாலமாகவே கூறிவருகிறார்கள். ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை, இதன் காரணமாகவே யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றார்.

# போதைப்பொருள் வியாபாரிகளின் தகவல் திரட்டல்

அந்தவகையில், ஒட்டமாவடி பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவோரின் தகவல்களை பிரதேச செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு எழுத்து மூலம் வழங்குமாறு பொதுமக்களை பிரதேச செயலாளர் வீ.தவராஜா வேண்டிக் கொண்டுள்ளார்.

# யாழில் “கரப்பான்பூச்சி” வடையால் பரபரப்பு

இதனையடுத்து நேற்றையதினம் (16) நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது எதிராளிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து உணவகத்துக்கு 60,000 ரூபாய் அபராதமும், சமையற்கூடத்திற்கு 20,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், கடையினை மீள திறப்பதற்கான அனுமதியினையும் நீதிமன்றம் வழங்கியது.

இதையடுத்து சுமார் 40 நாட்களாக மூடப்பட்டிருந்த குறித்த உணவகமும், சமையற்கூடமும் நீதிமன்றின் கட்டளையினையடுத்து நேற்று (16) திறக்கப்பட்டன.

# எம்.பிகளின் வீடுகள் எரிப்பு குறித்த ரிட் மனு விசாரணை

அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் (ஐஜிபி) மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி குறித்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 18 பேர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பந்துல குணவர்தன, காமினி லோககே, ஜனக பண்டார தென்னகோன், பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர, சிறிபால கம்லத், எஸ், எம், சந்திரசேன, ஷெஹான் சேமசிங்க, ரோஹித அபேகுணவர்தன, கோகிலா குணவர்தன, சஹான் பிரதீப் உள்ளிட்ட 39 பேரின் வீடுகள் குறித்த தினத்தில் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எம்பிக்களால் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘குணாகுழு’வில் நால்வர் சிக்கினர்

**கனகராசா சரவணன்**

அக்கரைப்பற்றில் நீதவான் வீட்டு மற்றும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசங்களில் பல வீடுகளை நீண்டகாலமாக உடைத்து கொள்ளையிட்டு வந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குணாகுழு என்ற பெயரில் இயங்கிவந்த குணா என அழைக்கப்படும் பிரபல பாதாள கோஸ்டியைச் சோந்த பிரதான சூத்திரதாரியான குணசீலன், பெண் ஒருவர் உட்பட 4 பேரையும், களுதாவளை பகுதியில் வைத்து நவீனரக கைத்துப்பாகி மற்றும் கைக்குண்டுடன் திங்கட்கிழமை (16) கைது செய்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். அக்கரைப்பற்றில்

> **பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்**

நீதவான் ஒருவரின் வீட்டு யன்னலை கடந்த வருடம் உடைத்து அவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு அங்கிருந்து தாலிக்கொடியை அறுத்துச் சென்ற சம்பவம் தொடர்பாக காரைதீவு வெட்டுவாய்கால் பகுதியில் குறித்த கொள்ளையன் தலைமறைவாகி இருந்துள்ளான்.

அவரை கைது செய்ய முற்பட்டபோது, பொலிஸாரை நோக்கி, அவன் துப்பாக்கி சூடு நடாத்திவிட்டு தப்பியோடியுள்ளார்.

அதேவேளை, அக்கரைப்பற்றில் பல வீடுகள் உடைத்து தாலிகொடிகள் உட்பட சுமார் 30 பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளை மற்றும் களுவாஞ்சிக்டியில் கடந்த வருடம் வர்த்தகர் ஒருவரின் வீடு உடைத்து அங்கிருந்து 80 பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளை சம்பவங்கள் தொடர்பான பிரதான சூத்திரதாரியான குணா உட்பட அவரின் குழுவைச் சேர்ந்தவர்களை பொலிஸார் தேடிவந்துனர்.

இந்நிலையில், சம்பவதினமான நேற்று (16) பகல் களுதாவளையிலுள்ள அவரது வீட்டில் வந்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் உடனடியாக அந்த வீட்டை சுற்றுவளைத்து முற்றுகையிடடனர் இதன் போது

> **அவரை கைது செய்ய முற்பட்டபோது, பொலிஸாரை நோக்கி, அவன் துப்பாக்கி சூடு நடாத்திவிட்டு தப்பியோடியுள்ளார்**

குணா மற்றும் பெண்ணொருவர் உட்பட 4 பேரை நவீனரக கைத்துப்பாகி ஒன்று மற்றும் கைக்குண்டுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட ஆறுமகத்தான்குடியிருப்பைச் சேர்ந்த அரூஸ், சசிகுமார், களுதாவளையைச் சேர்ந்த குணா, ராகினி ஆகியவர்கள் எனவும் இவர்கள் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரசியல்வாதிகளை

# மக்கள் குறை கூறுகின்றனர்

அரச உத்தியோகத்தர்கள் வேலை செய்யாத போது பொதுமக்கள் அரசியல்வாதிகளை குற்றம் சுமத்துவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். எனவே, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கம்பஹா மாவட்டத்தில் பணியாற்றும் அரச அதிகாரிகள் அமல்படுத்துவார்கள் என நம்புவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

எனவே, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கம்பஹா மாவட்டத்தில் பணியாற்றும் அரச அதிகாரிகள் அமுல்படுத்துவார்கள் என நம்புவதாக அவர் குறிப்பிடுகின்றார். கம்பஹா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற கம்பஹா பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்



கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பொதுவாக ஒரு கிராம சேவை களத்தில் எட்டு அரசு ஊழியர்கள் உள்ளனர். ஒருவர் குறைந்தபட்சம் 40,000 ரூபா சம்பளம் பெறுவாராயின், கிராம சேவை களத்தில் அவர்களின் சேவைக்காக மாதாந்தம் 320,000 ரூபா வழங்கப்படும். பொதுவாக, ஒரு பொது பிரதிநிதி ஆறு கிராமப்புற சேவை களங்களை வைத்திருக்கிறார். ஆனால் ஒரு மக்கள் பிரதிநிதியின் சம்பளம் ரூ. 17,500. கிராமத்தில் ஒரு மரணம் ஏற்பட்டால், அவர்கள் அவரிடம் உதவி கேட்கிறார்கள். மேலும் தெரு விளக்குகள் பிரச்சினை எனின் அதனையும் செய்ய சொல்கின்றர்கள். எனவே, கம்பஹாவில் உள்ள அரச அதிகாரிகளிடம் இருந்து இன்னும் சிலவற்றை எதிர்பார்க்கிறேன். எனவே அரசு அதிகாரிகள் என்னிடம் வெறும் கதை அளக்க வேண்டாம்.

ஒரு மாதமாகியும் மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மக்கள் எங்களை குறை கூறுவது நியாயம். எனவே, அடுத்த கூட்டத்திற்கு முன், விவசாயிகள் அமைப்புகளின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். உங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளால் இவற்றை நீடிக்காதீர்கள். அரசு அதிகாரிகளுக்கு அரசு எவ்வளவு செலவு செய்கிறது? பணிகள் நடக்காதபோது, மக்கள் அரசியல்வாதிகளை குற்றம் சாட்டுகிறார்கள், அதிகாரிகளை அல்ல. எனவே, மாவட்ட முதன்மை பொது அலுவலர் என்ற வகையில், இவற்றை கவனிக்க வேண்டும் என்றார்.



7.29 மில்லியன் ரூபா செலவில்

# முறுத்தானை அக்குரானை வீதி செப்பனிடப்பட்டது

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட ஆதிக்குடிகள் வாழும் பழம்பெரும் கிராமங்களான முறுத்தானை மற்றும் அக்குரானை போன்ற கிராமங்களை இணைப்புச் செய்யும் பிரதான வீதியானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ. சந்திரகாந்தனினால் 7.29 மில்லியன் ரூபா செலவில் செப்பனிடப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வின் போது பிரதேசசபை உறுப்பினர் கிருபாகரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் திரு. பரதன், கோறளை பற்று தெற்கு பிரதேச செயலாளர் ராஜ்பாவு, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராஜா உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகஸ்தர் மற்றும் துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மசாஜில் திருத்தம்

ஆண்களுக்கு பெண்கள் மசாஜ் பணிகளில் ஈடுபட முடியாத வகையிலும், ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் ஈடுபடும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் தம்மிக்க அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். அதற்காக பல்வேறு வழிகளில் சட்டம் இயற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மசாஜ் நிலையங்கள் மூலம் எய்ட்ஸ் உள்ளிட்ட பாலியல் ரீதியான நோய்கள் பரவலாக பரவி வருவதாலே இந்த சட்டம் இயற்றப்படுவதாக ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அதேவேளை, ஆயுர்வேத திணைக்களத்தில் மசாஜ் நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர் கட்டாயமாக இருக்க வேண்டும், மசாஜ் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்கள் தொழில்சார் அறிவு மற்றும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# INS டில்லி இன்று புறப்படும்

இந்திய கடற்படைக்கு சொந்தமான INS டில்லி கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) காலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. கடற்படை சம்பிரதாயங்களுக்கு அமைய குறித்த கப்பலை வரவேற்றது இலங்கை கடற்படை. திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ள யுத்த கப்பலான INS டில்லி கப்பல், 163.2 மீட்டர் நீளமுடையது.



390 கடல் அல் பரப்புடைய இந்த கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் ஷிருஸ் ஹூசென் அசாத் செயற்படுகின்றார். கப்பலின் கட்டளை அதிகாரி மற்றும் கிழக்கு கடற்படை மற்றும் தன்னார்வ கடற்படையின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் தம்மிக்க குமார ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (16) கிழக்கு கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்நிலையில் INS டில்லி கப்பல் இன்று 17ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டு செல்லவுள்ளது.

# நிலக்கரியின் விலை அதிகரிக்கும் அபாயம்

எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்த சில நாடுகள் மீண்டும் நிலக்கரிக்கு மாறியதன் மூலம் அதற்கான தேவை அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக உலக சந்தையில் நிலக்கரியின் விலை மீண்டும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்திருந்தார்.

இவ்வருடத்துக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ள 33 நிலக்கரி கப்பல்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி இலங்கைக்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஷெஹான் சுமனசேகர குறிப்பிட்டார். எவ்வாறாயினும், உலக சந்தையில் அதீதமாக அதிகரித்துள்ள நிலக்கரியின் விலை எதிர்காலத்தில் படிப்படியாக குறையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர மேலும் தெரிவித்தார்.



## சந்திப்பு...

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் ஸ்டீபன் டுவிக் (StephenTiwgg) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தார்

# சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் மஹிந்தவை சந்தித்துப் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் சர்வதேச திணைக்களத்தின் துணை அமைச்சர் சேங் ஷூ தலைமையிலான பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று (16) சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு, இருத்தரப்பு ஒத்துழைப்புகளை முன்னேற்றுவது தொடர்பாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது என இலங்கைக்கான சீனத் தூதகரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு கட்சிகள் என்ற வகையில் சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்துக்களை பரிமாறிக்கொண்டதாகவும் தூதரகம் கூறியுள்ளது.

இதனை தவிர சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாடு தொடர்பாக இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கு விளக்கும் நிகழ்ச்சி கொழும்பில் நடைபெற்றது.



சமூக நீதிக்கான

# ஆணைக்குழு உருவாக்கப்படும்

## அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துவோம்

## தேசிய தைப்பொங்கல் விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



அனைத்து மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்து அனைவரும் ஒன்றிணைந்து வாழும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக சமூக நீதிக்கான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் துர்கா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) பிற்பகல் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், சகல இன மக்களும் ஒன்றிணைந்து வாழும் நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார சுபீட்சத்தை அடைந்த நாடொன்றை உருவாக்கும் நோக்குடன் 75 வருடங்களுக்கு முன்னர் டி.எஸ்.சேனாநாயக்க ஏற்படுத்திய இலங்கை எனும் தனித்துவத்தை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை குறித்த அறிக்கையை பெப்ரவரி மாதம் நாட்டுக்கு வெளியிடவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அடுத்த வாரம் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

வடக்கில் தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து இந்த விழாவின் பின்னர் ஆராய இருக்கிறோம். பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். நாம் மீண்டும் நாட்டை ஒன்றிணைக்கவும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவும் வேண்டும் என்று அவர்களிடம் கோரினேன். பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சி எம்.பிகளுடன் பேசினேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை மீண்டும் சந்திக்க இருக்கிறேன். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை பற்றி பெப்ரவரி மாதம் வெளியிட வேண்டும். அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கிறேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை சந்திக்க இருக்கிறேன். இந்தப் பிரச்சினைகளை ஒதுக்கியோ காலங்கடத்தியோ தீர்க்க முடியாது. தீர்வு என்ன என்பதை பாராளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் வெளியிட வேண்டும்.

பல பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம். காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் பேசியுள்ளோம். என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிய வேண்டும். அதேபோன்று உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவொன்றை உருவாக்க வேண்டும். இந்த ஆணைக்குழுவை அமைப்பது குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தின் கருத்தை வினவியிருந்தேன். உண்மையை கண்டறிவதை நாமும் விரும்புகிறோம். அதன் மூலம் எம்மீதான குற்றச்சாட்டுகளும் நீங்கும் என அவர்கள் தெரிவித்தார்கள். எனவே உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை உருவாக்க எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

அதேபோன்று பயங்கரவாதத்தை தடுக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை கொண்டுவர இருக்கிறோம். அடுத்து காணிப்பிரச்சினை காணப்படுகிறது. வன்னியில் வனஜீவராசிகள் திணைக்களத்துடன் தொடர்புள்ள காணிப் பிரச்சினை குறித்து ஆராய இருக்கிறோம். அத்தோடு யாழ்ப்பாணத்தில் மீள காணிகளை கையளிப்பது குறித்தும் ஆராயப்படும். யுத்த காலத்தில் இந்தப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக படையினர் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தற்பொழுது 3000 ஏக்கர் தான் தான் எஞ்சியுள்ளது. அதிலும் மற்றொரு பகுதியை மீள வழங்க இராணுவம் விருப்பம் தெரிவித்துள்ளது. அது குறித்தும் ஆராயப்படும். அடுத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். அது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்சினையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமல்படுத்துமாறு கோருகின்றனர். இதனை கலந்துரையாடி செயற்படுத்த இருக்கிறோம். இவற்றை எதிர்வரும் ஓரிரு வருடங்களில் கட்டம் கட்டமாக முன்னெடுப்போம்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி மேலும் பல பிரச்சினைகள் குறித்தும் ஆராய வேண்டி இருக்கின்றன. மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளையும் பாராளுமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து இரண்டாம் கட்ட பேச்சு நடத்த இருக்கிறோம். மலையக தமிழ் மக்களை எமது சமூகத்துக்குள் உள்வாங்கி ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகளை வழங்க வேண்டும். தமிழ் ,முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமன்றி சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஓரங்கட்டப்பட்ட கிராமங்கள் உள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. குலபேதம் ,வறுமை காரணமாக ஒதுக்கப்படும் நிலை உள்ளது. கிறிஸ்தவ மக்களுக்கு தமது பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் உள்ளது. அவை குறித்து ஆராய சமூக நீதிக்கான ஆணைக்குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து இலங்கையர் என்ற தனித்துவத்தை உறுதிப்படுத்துவோம். இவை அனைத்தையும் முன்னெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் என்றார்.

# நீரின்றி அழியும் நிலையில் வயல்

## பணம் செலுத்தியும் பயனில்லை என்கிறார் விவசாயி

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பெரியபரந்தன் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள விவசாயி ஒருவரின் ஐந்து ஏக்கர் வயல், நீரின்றி அழியும் நிலையில் இருப்பதாக விவசாயி கவலை தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் காணப்படுகின்ற தன்னுடைய வயல் நிலம் இரண்டு போகம் விதைக்க கூடிய வயல் நிலம் எனவும், எனவே, குறித்த காணிக்கு நீர் விநியோகிக்கின்ற வழியில் தற்போது கழிவு நீர் செல்கின்ற வாய்க்கால் சீரமைக்கப்பட்டு அகலப்படுத்தப்பட்டுள்ளதால் தன்னுடைய சொந்த செலவில் வயலுக்கு நீர் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட குழாய்கள் உடைந்து காணப்படுகின்றது என்றார்.

இதனை சீரமைத்து தன்னுடைய ஐந்து ஏக்கர் வயல் காணிக்கும் நீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு கமக்கார அமைப்பு மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் ஆகியோரிடம் பல தடவைகள் கோரியும் இதுவரை செய்து தரவில்லை. நிதியில்லை என்று காரணம் கூறுகின்றனர் எனத் தெரிவித்த அவர், வருடந்தோறும் வாய்க்கால் சீரமைப்பு நிதி உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் கமக்கார அமைப்புக்கு முறையாகச் செலுத்தி வருகின்றேன் ஆனால், தன்னுடைய வயல் வாய்க்கால் இன்றி காணப்படுகிறது என்றார்.



எனவே, தனர் ஐந்து ஏக்கர் வயலும் அழியும் முன்னர் உரிய தரப்பினர் விரைந்து கவனம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கசிப்பை ஒழிக்குமாறு மக்கள் கோரிக்கை

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு கரைதுறைபற்று தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

117 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் கசிப்பினால், குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக பொது மக்கள், பொலிஸாருக்கு தகவல் கொடுத்தாலும், தகவல் வழங்குவோரின் விபரங்கள் கசிந்து விடுவதால், தகவல்களை வழங்குவதற்கும் பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

இந்நிலையில், சட்டவிரோத மதுவினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக, கிராம மட்டத்தில் பிரதேச செயலக அதிகாரிகள் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்த வேண்டுமென்றும் கோரியுள்ளனர்.

கசிப்பினால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் குடும்ப வன்முறைகள் சமூக வன்முறைகளாக அதிகரித்து செல்வதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




# 9 'ஏ' சித்திகளை பெற்ற மாணவர்களுக்கு பணம்

■ மு.தமிழ்ச்செல்வன்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடந்த முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி 9 பாடங்களிலும் ஏ பெறுபேறுகளை பெற்ற மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களுக்கு சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தினர் தலா 50 ஆயிரம் ரூபாவினை ஊக்குவிப்புத் தொகையாக வழங்கியுள்ளனர். சாவகச்சேரி சங்கத்தனை சனசமூக நிலையம் மற்றும் இளங்கோ பாலர் பாடசாலையின் பொங்கல் விழா நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (15) சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே குறித்த மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வைப்பிலிடப்பட்ட வங்கி புத்தகம் கையளிக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட மாணவச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் என் சர்வேஸ்வரன், ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வன், வேல்ட் விசன் நிறுவனத்தின் நுவரெலிய மாவட்ட இணைப்பாளர் அழகுராஜா மற்றும் சனசமூக நிலையத்தின் தலைவர் செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் பொது மக்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# கட்டுப்பணம் செலுத்தியது சமத்துவக் கட்சி

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை சமத்துவக் கட்சி திங்கட்கிழமை (16) செலுத்தியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைககளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

# கிளிநொச்சியில் 100 ஏக்கர் நெல் பாதிப்பு

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, பூநகரி குமுழமுனைப் பகுதியில் 100 ஏக்கர் வரையான நெற்பயிர் அழிவடையும் ஆபத்தில் உள்ளதென விவசாயிகள் தெரிவித்துள்ளனர். கரியாலை நாகபடுவான் குளத்தின் ஒரு பகுதியாகவுள்ள குமுழமுனைப் பகுதியின் 100 ஏக்கர் விளையும் பருவத்தில் வயல் நீரின்றி அழிவடையும் நிலையில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு நீரைக் கொண்டு செல்ல வேண்டிய பிரதான வாய்க்கால் நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாது காணப்படுகிறது எனத் தெரிவித்த விவசாயிகள், மழைவீழ்ச்சி இம்முறை குறைவாகக் காணப்பட்டதோடு கரியாலை நாகபடுவான் குளத்துக்கான நீர் வரத்து குறைந்தமையே விவசாயம் பாதிக்கப்பட்டமைக்கு காரணமாக அமைந்துள்ளதென விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது கரியாலை நாகபடுவான் குளத்தின் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கை நீர்ப்பாசனம் மேற்கொள்வதிலும் தாங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.




# 'ஷெம்போ' இளைஞன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, பொங்கல் தினத்தன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களை கலைப்பதற்காக பொலிஸாரால் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த இளைஞர்களில் ஒருவர், ஷெம்போ போட்டு குளித்தார். அந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

# "மரம் தனித்து நிற்கும்"

■ எம்.சி. அன்சார்



முஸ்லிம்களின் எதிர்காலத்ததையும், இருப்பையும் தீர்மானிப்பதற்கான அரசியல் முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனேகமான மாவட்டங்களில் தனித்து மரச்சின்னத்தில் களமிறங்கவுள்ளது. என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை மத்தியகுழு உறுப்பினர்களுன் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுத் தொகுதி மண்டபவத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று கைப்பற்ற வேண்டும். முஸ்லிம்களின் ஒரே குரல் முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பதனை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துக் கூற வேண்டும். அனைத்து பேதங்களையும் மறந்து இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினை பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்தத் தேர்தலிலே முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்ற சவால்கள், சதிகள், ஆபத்துக்களை சரிவர விளங்கிக் கொள்ளாமல் எவரும் பிழையான தீர்மானங்களை எடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும். அதற்கு சிறந்த நபர்களை வேட்பாளர்களாக களமிறக்கவுள்ளோம் என்றார்.

எனவே, இத்தேர்தலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளுக்கு அப்பால் சம்மாந்துறை மக்கள் ஐக்கியத்தைக் கடைப்பிடித்து பெருந்தலைவர் அஷ்ரப் உருவாக்கிய நமது தேசிய விடுதலை இயக்கமான முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றார்

# தேர்தல் முடியும் வரை இலவச அஞ்சல் வசதி

■ எம்.எஸ்.எம். ஹனீபா

மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக கூறப்படும் உள்ளூராட்சி தேர்தலுக்கு இலவச அஞ்சல் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பிரதி அஞ்சல் மா அதிபதி ராஜித கே. ரணசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபம், சகல மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபதிகளுக்கும், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்கள், அஞ்சல் அதிபர்கள் மற்றம் உப- அஞ்சல் அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோரால் அனுப்பப்படும் கடிதங்கள், பொதிகள் மற்றும் ஆவணங்களையும், கிராம உத்தியோகத்தர்களுக்கு, மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு, பிரதி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்புவதற்காக அஞ்சல் இடப்பட்ட பொதிகளையும், கடிதங்களையும் முன்னுரிமையளித்து முதல் அஞ்சலிலேயே அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் வரையிலும் இந்த இலவச அஞ்சல் வசதி அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# நியமனம்

■ எம்.என்.எம்.அப்ராஸ்

ஐக்கிய மக்கள் சக்தியின் சமகி வரிசைப்படுத்தல் படையின்(Samagi Wihidum Balaganaya) திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளராக றிஸ்கான் முகம்மட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த நியமனக் கடிதம் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால், ஞாயிற்றுக்கிழமை (15) வழங்கி வைக்கப்பட்டது.

இந்த வைபவம், ஐக்கிய மக்கள் சக்தியின் சமகி வரிசைப்படுத்தல் படையின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹேஷா விதானகே தலைமையில் களுத்துறையில் இடம்பெற்றது.

றிஸ்கான் முகம்மட், ஐக்கிய மக்கள் சக்தி இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும், அம்பாறை மாவட்ட செயலாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அங்குரார்ப்பண விழா

■ எம் எஸ் எம் நூர்தீன்

காத்தான்குடி றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலை அங்குரார்ப்பண விழா, ஞாயிற்றுக்கிழமை (15), காத்தான்குடி ஸாவியா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது அஹதியா பாடசாலையின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கி கூறப்பட்டதுடன் றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலையின் செயற்பாடு அஹதியா பாடசாலையின் கல்வித் திட்டம் என்பன பற்றியும் தெரிவிக்கப்பட்டது. பொறியியலாளர் எம்.ரஊப் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் மௌலவி எம்.ஐ.ஆதம்லெவ்வை, மட்டக்களப்பு மாவட்ட அஹதியா சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஸாஜஹான், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எல். ஜுனைட், மௌலவி ஏ.ஜே.எம்.அமீன் பலாஹி உட்பட றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலை ஆசிரியைகள் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு

■ தீஷான் அஹமட்

வறிய மாணவர்களின் உயர்தரக் கற்றல் செயற்பாடுகளுக்காக துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு, திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயத்தில் கல்விக் கற்று, க.பொ.த.உயர்தரத்தில் கற்பதற்காக, சேனையூர் , மூதூர் , இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் பள்ளிக்குடியிருப்பு போன்ற இடங்களுக்குச் சென்று வரும் ஐந்து மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைக்கு இணங்க சேனையூர் மத்திய கல்லூரியின் 21ஆவது அணியினரால் செயற்படுத்தப்படும் "நண்பர்கள் "கல்வி நலன்புரி அமைப்பினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

அதற்கமைய குறித்த அமைப்பின் பிரதிநிதியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான கோபகன், பாடசாலையின் உப- அதிபர் பா.ரஞ்சித்குமார் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தனர்.

### மிடில்டன் தோட்ட லயக்குடியிருப்பில் தீ

# 7 வீடுகள் கருகின

## எழுத்தாளர் மல்லிகை.சி.குமாரின் வீடும் எரிந்தது

■ எஸ்.கணேசன்



தலவாக்கலை-மிடில்டன் (பெரிய மல்லியப்பு) தோட்ட லயக்குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீயால் 7 வீடுகள் முற்றாக எரிந்துள்ளன.

பெரிய மல்லியப்பு தோட்ட இலக்கம் (03) லயன் தொடர் குடியிருப்பில் பொங்கல் தினமான ஞாயிற்றுக்கிழமை (15) இரவு 8.20 மணியளவில் தீ பரவல் ஏற்பட்டதாக பாதித்தோர் தெரிவித்தனர்.

இதன்போது, 12 அறைகளைக்கொண்ட லயன் குடியிருப்பில் 7 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

மேலும், 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுள் 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனையோர் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பரவிய தீயை அதே தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், பிரதேசவாசிகள், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதில் மலையக எழுத்தாளர்களான மல்லிகை சிவகுமார் மற்றும் கவிஞர் சேழியன் ஆகியோரது வீடுகளும் எரிந்துள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட போது அதிகமானோர் தோட்டத்தில் நடைபெற்ற



தைப் பொங்கல் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்ததால் தீ விபத்தில் யாருக்கும் எவ்விதமான விபரீதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் குழந்தை பலி

## ஓட்டோ ஓட்டிய சிறுவனும் கைது

■ ஆ.ரமேஸ்

இராகலை -சென் லொணாட்ஸ் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) மாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

14 வயது சிறுவன் ஒருவன், தனது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவில், தனது இரண்டரை வயது சகோதரனை ஏற்றிக்கொண்டு,இராகலை நடுகணக்கு பகுதிக்குச்



சென்றுள்ளார்.

இதன்போது வேக கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ, கவ்வாத்து செய்யப்பட்ட தேயிலை மலையில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஓட்டோவிலிருந்து தேயிலை மலையில் வீசுப்பட்டு வீழ்ந்த குழந்தை பலத்த காயங்ளுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதென இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் ஓட்டோவை செலுத்திய 14 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### அமைச்சர் ஹரீனின் மாமி தலைமையில்

# ஐ.ம.ச கட்டுப்பணத்தை செலுத்தியது

■ பாலித ஆரியவன்ஸ



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி, பதுளையில் நேற்று (16) கட்டுப்பணத்தை செலுத்தியது.

பதுளை மாநகர சபை மற்றும் பதுளை பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டதாக பதுளை மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரி கே. காண்டீபன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ள அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோவின் மாமியான சுசீலா டயஸின் தலைமையில், ஐக்கிய மக்கள் சக்தி தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

# இரத்தினபுரியில் தைத்திருநாள் பெருவிழா

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண கல்வி தகவல் தொழிநுட்ப, கலாசார அமைச்சு ,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம் என்பன இணைந்து நடாத்தும் தைத்திருநாள் பெருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

அழிந்துவரும் தமிழ் கலை, பண்பாடு அகியவற்றை பாதுகாக்கும் முகமாக தைப்பொங்கல் விழாவை, இரத்தினபுரி மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது பொங்கல் பொங்கும் நிகழ்வு , உறியடித்தல். சிலம்பாட்டம், பறையிசை, கபடி, பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம், பரதநாட்டியம் உட்பட பல நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

**“ அழிந்துவரும் தமிழ் கலை, பண்பாடு அகியவற்றை பாதுகாக்கும் முகமாக தைப்பொங்கல் விழாவை, இரத்தினபுரி மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது**

அத்துடன் பாரம்பரிய கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி உள்ள மாணவர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் திருவல்லுவர் விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இலங்கைக்கான இந்திய உதவி உயர் ஸ்தானிகர் எஸ்.ஆதிரா, இந்நிய கலாசார நிலையத்தின் இயக்குனர் அங்குரன் டுட்டா, வீரகேசரி பத்திரிக்கையின் நிர்வாக இயக்குநரும் உலகளாவிய இந்திய வம்சாவளி மக்கள் பேரவையின் தலைவருமான குமார்.நடேசன், விவேகா பயிற்சி நிலையத்தின் ஸ்தாபக தலைவர் கே.டி.குருசுவாமி, மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் கல்வி அதிகாரிகள் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள், நலன் விரும்பிகள் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர்.





## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

மாநகர சபை உறுப்பினர் கீர்த்தி சமரஜீவவுக்கு ஒதுக்கப்பட்ட பொது வேலைத்திட்டத்துக்கான நிதியில், நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் ஐம்பது குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (16) திங்கட்கிழமை நுவரெலியாவில் நடைபெற்றது. (எஸ். கே. குமார்)





## பூஜை வழிபாடுகள்

பசறை– கோணக்கலை மேற்பிரிவு தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் தைப்பொங்கல் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.(நடராஜா மலர்வேந்தன்)

# ஓடும் பஸ்ஸிலிருந்து இறங்கிய மாணவன் ஸ்தலத்திலேயே பலி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பயணித்துக்கொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து மாணவனொருவன் உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு உயிரிழந்த மாணவன் நாவலப்பிட்டி-உடஹின்தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது மாணவன் என்பதுடன், இவர் நாவலப்பிட்டி-அனுருத்தகுமார தேசிய பாடசாலையில் தரம் 10இல் கல்விக் கற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவன் நேற்றுமுன்தினம் (15)



காலை நாவலப்பிட்டி நகரில் நடந்த பிரத்தியேக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, தனது வீட்டுக்கு அருகில் இறங்க முயற்சித்து கீழே விழுந்துள்ளார். அத்துடன் அருகில் இருந்த மண்மேட்டில் மோதுண்டு பலத்த காயமடைந்து அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என குருந்துவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு ஏழு மணியளவில் பஸ்ஸை நிறுத்துவதற்கு முன்னரே மாணவன் பஸ்ஸிலிருந்து இறங்க முயற்சித்த போதே, இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, பஸ்ஸின் சாரதி குருந்துவத்த பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கம்பளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### இரண்டு பிரதான கட்சிகளும்

# மாத்தளையில் கட்டுப்பணத்தை செலுத்தின

■ மஹேஸ் கீர்த்திரத்ன



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக, இரண்டு பிரதான கட்சிகள் நேற்று (16) கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்பனவே இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியானது, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தலைமையில் நேற்று (16) கட்டுப்பணத்தை செலுத்தியது. .

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் வசந்த பெரேரா கட்டுப்பணத்தை செலுத்தினார்.

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

வத்தேகம கல்வி வலய, மடுல்கலை நெல்லிமலைசிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான எம். நவநீதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும் இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அதிபர் வேண்டுகோள் விடுக்கிறார்.

# தப்பிய மான் ஒப்படைப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வேட்டையர்களிடமிருந்து தப்பி வந்த மானொன்று, வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை நகரிலுள்ள வர்த்தக நிலையத்தின் பின்புறமாக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாமொன்றுக்குள்



குறித்த மான் பதுங்கியிருப்பதை வர்த்தக நிலையத்தின் பணியாளர்கள் நேற்று (16) காலை கண்டுள்ளனர்.

இதனையடுத்து நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளனர்.

கூடாரத்தில் பதுங்கியிருந்த மானின் உடலில் காயங்கள் காணப்படுவதால் குறித்த மான் வேட்டையாளர்களின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# கேகாலையில் சர்வமதக் கூட்டம்



■ என்.ஆராச்சி

இந்த வருடத்துக்கான கேகாலை மாவட்ட சர்வமத கூட்டமானது தோலங்கமுவ மனித அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்தாண்டு நடைபெற்ற சர்வமத கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், கொள்கைகள் உள்ளிட்டவையை இந்த வருடமும் முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# தள்ளாடும் 13ஆவது திருத்தமும் தள்ளிப்போகும் தீர்வும்

தமிழீழ விடுதலைப் புலிகள், யுத்தத்தில் தோல்வியைத் தழுவியதை அடுத்து, அவ்வியக்கத்தில் ஏற்பட்டிருந்த கசப்பான சம்பவங்களை பலரும் பதிவிட்டிருந்தனர். எனினும், உள்வீட்டில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளும் பிளவுமே காரணமென காரணங்கள் கூறப்பட்டிருந்தன.

பிளவுகள் இல்லை, யுத்தத்தால் தோற்கடித்துவிட்டோம் என, அதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவும், அன்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்‌ஷவுமே காரணமென, அவ்விருவருக்கும் சார்பான அரசியல்வாதிகள் புகழ்பாடினர்.

இல்லையில்லை, அவ்வியக்கத்தை பிளவடையச் செய்ததன் பிரதான பங்காளியாகவும் மூளை சாலியாகவும் செயற்பட்டவர், அன்று பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என, எதிர்த்தரப்பினர் வாதங்களை முன்வைத்தனர்.

நல்லாட்சியில் புதிய அரசியலமைப்பு பேச்சு அடிபட்டு, காற்றோடு காணாமற் போய்விட்டது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர், 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தருவேன் என்றும் அனைவரும் ஒத்துழைக்குமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழ்க் கட்சிகளுடன் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதற்கிடையே உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிகள் தனித்து களமிறங்க தீர்மானித்துவிட்டனர்.

எனினும், உள்ளூராட்சி தேர்தலில் ஓரணியில் போட்டியிட வக்கில்லாத கூட்டமைப்பு, தமிழர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்காது என்றெல்லாம், சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கிடையே, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்தும் பேசினார்.

13ஆவது திருத்தம் உடனடியாக அமுலாகாது, கட்டம் கட்டமாகவே நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என திட்டவட்டமாக கூறிவிட்டார். ஓரணியில் திரண்டு அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ்த்தரப்பினர் வக்கில்லாதவர்களாக இருப்பதால், சுதந்திர தினத்தன்று தீர்வை எதிர்பார்க்க முடியாது.

தேசிய சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு உரையாற்றமாட்டார் எனக் கூறப்படுகின்றது. அப்படியானால், தீர்வு தொடர்பிலான இறுதி அறிவிப்புக்காக காத்திருக்கவே வேண்டும். அதற்கு எத்தனைகாலம் எடுக்குமென வரையறுத்துக் கூறமுடியாது.

தேசியப் பிரச்சினைக்கான தீர்வை வழங்காவிடின், உங்களிடத்தில் (தமிழ்த்தரப்பிடம்) ஓர் ஒற்றுமையில்லை என பதிலடி கொடுக்கவும் கூடும். அதனையே சர்வதேசத்தின் தளத்துக்குக் கொண்டு சென்று, நாங்கள் தயார், எனினும், அவர்களிடத்தில் (தமிழ்த் தரப்பிடம்) ஒன்றுமையில்லை என பிரசாரம் செய்யக்கூடும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டிருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட முழுமையான அதிகாரங்கள், அமுலில் இல்லை. மாகாண சபைத் தேர்தலுக்காக ரணில் விக்கிரமசிங்கவால் போடப்பட்ட முடிச்சும் அவிழ்க்கப்படவில்லை. ஆக, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை வைத்து காலத்தை கடத்தும் முயற்சியே முன்னெடுக்கப்படுகின்றது என்பது மட்டுமே நிதர்சனம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# வெட்கம்கெட்ட அரசியல்

**மொஹமட் பாதுஷா**

இலங்கை அரசியலில் வெட்கம்கெட்ட போக்கை தொடர்ச்சியாக கண்டு வருகின்றோம். வெட்கம்கெட்டவர்களால் நமது அரசியல் நிரம்பியிருப்பதே இதற்கு அடிப்படைக் காரணமாகும். இப்படியான பண்புகளைக் கொண்டவர்களால் மட்டுமே இந்த அரசியலில் எது நடந்தாலும் நிலைத்திருக்க முடிகின்றது என்பது வேறுகதை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏம்.எம். ஹிஸ்புல்லா இணைந்து கொண்டமை இப்போது சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியிருக்கின்றது. முன்னதாக ஆளுக்காள் நையாண்டி செய்த றவூப் ஹக்கீமும் ஹிஸ்புல்லாவும் இப்போது கொஞ்சம்கூட வெட்கமின்றி இணைந்து கொண்டுள்ளதாகவே விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், இன்னும் ஒரு வாரத்தில் இதுவெல்லாம் அடங்கி விடும்.

முஸ்லிம் மக்களுக்கான அரசியல் என்று நோக்குகின்ற போது இரு முக்கிய தலைவர்கள் ஒன்றிணைந்தது மிகவும் வரவேற்கத்தக்க விடயம் என்பதில் இரு நிலைப்பாடுகள் இருக்க முடியாது. இதுபோல அனைத்து முஸ்லிம் தலைவர்களும் அணிகளும் சமூகத்தை மையமாகக் கொண்டு இணைந்து செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நீண்டகாலமாக இருக்கின்றது.

ஆனால், ஹக்கீம் - ஹிஸ்புல்லா இணைவது போன்ற அல்லது பெருந்தேசிய மற்றும் தமிழ் தேசிய அரசியலில் இடம்பெற்றுக் கொண்டிருப்பது போன்ற இணைவுகள், கூட்டுக்கள் உண்மையில் சமூக நோக்கம் கருதியதா என்பதில் இன்னும் சந்தேகமிருக்கின்றது.

இலங்கைச் சூழலில், தேர்தல் கால கூட்டுக்களும் தேர்தலுக்கான கூத்துக்களும் நாமறியாத சங்கதியுமல்ல. தேர்தலையோ அல்லது சுய அரசியல் இலாபத்தையோ மையமாக வைத்து அரசியல் முடிவுகளை எடுப்பதும், சேர்வதும் பிரிவதுமான வெட்கம்கெட்ட போக்கு எப்போது முடிவுக்கு வரும் என்பதுதான் தெரியவில்லை.

பொதுவாக இலங்கை அரசியலுக்கோ அல்லது முஸ்லிம் அரசியலுக்கோ இதுவொன்றும் புதிதல்ல, இது முதலாவது நிகழ்வும் அல்ல, கடைசி நிகழ்வும் அல்ல. அத்துடன்; யதார்த்த அரசியலைப் பொறுத்தமட்டில் இதில் ஆச்சரியப்படுவதற்கும் எதுவுமில்லை.

‘அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை எதிரியும் இல்லை’ என்று சொல்வது குறிப்பாக நமது அரசியலுக்கு மிகப் பொருந்தக் கூடிய உவமானம் ஆகும். ஆனால், இப்போது கைகோர்க்கின்ற அரசியல்வாதிகள் கடந்த காலத்தை மறந்து, சமூக நலனுக்காக கடைசிவரை உண்மையில் இணைந்து செயற்படுவார்கள் என்றால், இந்த விமர்சனங்கள் இத்தோடு முடிவுக்கு வந்து விடும்.

எது எப்படியிருப்பினும், நம்மால் மக்களுக்குச் சேவை செய்யவில்லை, நமது வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லையே என்பதற்காக அரசியல்வாதிகள் ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை. செயற்பாட்டு அரசியலில் மேற்கொண்ட பெரிய ஊழல்கள், குற்றங்களுக்காக சம்பந்தப்பட்டவர்கள் மனம் வருந்திய, வெட்கப்பட்ட, பிராயச்சித்தம் தேடிய வரலாறு நமது நாட்டில் கிடையாது.

மேற்கத்தேய நாடுகளில் மட்டுமன்றி அரசியல் ரீதியாக பக்குவப்பட்ட சில ஆசிய நாடுகளில் கூட ஒரு அரசியல்வாதி மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அல்லது அவரது பொறுப்பற்ற தனத்தால் ஒரு தவறு நேர்ந்து விட்டால், உடனடியாக பதவி விலகும் முடிவை எடுத்துவிடுவார். பொறுப்புக்கூறலின் ஓர் அடிப்படையாகவே இதனை உலகம் நோக்குகின்றது.

ஆனால் நமது நாட்டில் எல்லாம் தலைகீழாகவே நடக்கின்றது. இதற்கு நல்ல உதாரணம் ராஜபக்‌ஷக்களின் ஆட்சியாகும். நாட்டில் திட்டமிடப்படப்படாத ஓர் ஆட்சியை நடத்தி, அதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதற்காக ஒருபோதும் ராஜபக்‌ஷக்கள் வெட்கப்பட்டதாக, மனம் வருந்தி பிராயச்சித்தம் தேட முனைந்ததாக தெரியவில்லை.

குறிப்பாக கோட்டபாய ராஜபக்‌ஷ மீதே கணிசமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதும் அவர் துரத்தியடிக்கப்படும் வரை ஜனாதிபதி பதவியில் எந்தவிதமான உறுத்தலும் இன்றி அவர் அகலக் கால்விரித்து அமர்ந்திருந்தார். இப்போது மீண்டும் எந்தச் சலனமும் இன்றி நாடு திரும்பினார்.

ஆட்சி கவிழ்க்கப்பட்ட ராஜபக்‌ஷக்கள் மீண்டும் அரசியலில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். தமது தவறுகளுக்கு அவர்கள் பிராயச்சித்தம் தேடும் பாணியிலான அரசியல் செயற்பாடுகளை பெரும்பாலும் அவதானிக்க முடியவில்லை.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி உள்ளடங்கலாக பெரும் ஊழல்களுடன் தொடர்புபட்ட முக்கிய புள்ளிகள் தண்டிக்கப்படவில்லை. நாட்டையே சூறையாடி வங்குரோத்து நிலைக்கு தள்ளிய முன்னைய ஆட்சியானர்களுக்கு புதிய ஜனாதிபதியும் அரசும் எந்தப் பாடத்தையும் படிப்பிக்கவில்லை. வெட்கமின்றி, ஒருவரை ஒருவர் பாதுகாக்கும் பாணியிலான அரசியலே இனியும் தொடருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

மறுபுறத்தில், ராஜபக்‌ஷ ஆட்சியை கவிழ்ப்பதற்காக பின்னணியில் நின்ற அரசியல் சக்திகளும் இப்போது வெட்கம் கெட்ட தனமாகவே செயற்படுவதாகச் சொல்லலாம்.

அதேபோல், ராஜபக்‌ஷக்கள் உள்ளடங்கலாக இந்த நாட்டை நாசமாக்கிய பெரும்பான்மை, சிறுபான்மை அரசியல்வாதிகளுக்கு இனிவரும் தேர்தல்களில் வெட்கம் கெட்ட தனமாக மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதுதான் உச்சக்கட்ட மோசமான நிலையாகும். அதாவது. மக்கள் சுரணையில்லாமல் செயற்படுகின்ற போக்கு.

இது தேர்தல் காலம் !

நமது அரசியலின் மிக உச்சபட்ச வெட்கம்கெட்ட தனங்கள் எல்லாம் வெளிப்படும் ஒரு பருவகாலமாக இதனைக் கொள்ளலாம். ஹிஸ்புல்லா - ஹக்கீம் இணைவு மட்டுமன்றி இன்னும் பல விநோத நிகழ்வுகளும் இடம்பெறத் தொடங்கியுள்ளன. எல்லாம் மக்களுக்காகவே என்ற மாயத் தோற்றமும் கட்டமைக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஒருவரை ஒருவர் கிண்டலடித்த, விமர்சித்த அரசியல்வாதிகள் எத்தனையோ பேர் பின்னர் இணைந்தார்கள். நகமும் சதையுமாக இருந்த பலர் பிளவுபட்டு வேறு வேறு திசைகளில் பயணித்து, மீண்டும் இணைந்து கொண்டார்கள். இலங்கை அரசியலுக்கு இது பொது இயல்பு எனலாம்.

முஸ்லிம் அரசியலில் பரவலாகவும் தமிழர் அரசியலில் அவ்வப்போதும் இந்தக் கூட்டுக்கள் மன்னிக்கவும் கூத்துக்கள் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த இடத்தில்தான் வாக்காளர்களான மக்கள் மிகத் தெளிவுடனும் கவனமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

ஆகப் பிந்திய உதாரணமான ஹக்கீம் - ஹிஸ்புல்லா இணைவை எடுத்துக் கொள்வோம். கடந்த காலத்தில் இவர்கள் இருவரையும் ஆதரித்த மக்கள் பிரிவினர் இரு துண்டங்களாக துருவப்படுத்தப்பட்டிருந்தனர். எதிர் எதிர் அரசியல் செய்தனர்;. இப்போது தலைவர்கள் இருவரும் இலகுவாக இணைந்து கொண்டனர். ஆனால் இருதரப்பு தொண்டர்களின் நிலைதான் தர்மசங்கடமானது.

இது ஒரு நிகழ்வு மட்டும்தான். இது தேசிய ரீதியில் ஒவ்வொரு ஊரிலும் காலகாலமாக நடந்து கொண்டிருக்கின்றது என்பது முக்கியமானது.

நாம் ஆதரிக்கின்ற தலைவருக்காக, கட்சிக்காக இரு குழுக்களாக பிரிந்தவர்கள். ஆளுக்காள் சண்டையிட்டவர்கள், தங்கள் மீது அடிகளை வாங்கிக் கொண்ட ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களில் அநேகர் கடைசியில் அரசியல்வாதிகளால் கைவிடப்பட்டனர் என்பதை மறந்து விடக் கூடாது.

இன்று நீங்கள் வேறுவேறு கட்சிகளுக்கு ஆதரவளித்து, உங்களுக்கு இடையில் சண்டை பிடித்துக் கொள்ளலாம். ஆனால், இன்னும் சில காலத்தில் அரசியல்வாதிகள் வெட்கமின்றி கைகோர்த்து விடுவார்கள். பொதுமகனான நீங்கள்தான் ஒருவரை முகத்தை பார்க்க வெட்கப்பட்டு சங்கடப் பட வேண்டியிருக்கும் என்பதை நினைவிற் கொள்வது நல்லது.

கடந்த காலங்களில் குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் கட்சிசார் முரண்பாடுகள், பிரிவுகள் ஏற்பட்டன. மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் ஊர்களுக்கு இடையிலும் குழுக்களுக்கு இடையிலும் கருத்துச் சண்டைகளும் கள மோதல்களும் நடந்தேறின. உயிர், உடமைகளை இழக்க வேண்டி ஏற்பட்டது.

ஆனால், எல்லாக் காலமும் நிலைமை இப்படியே இருக்காது. அரசியல்வாதிகள், தமது ஆதரவாளர்களைப் பற்றிக் கவலைப்படாது சேர்ந்து விடுவார்கள் அல்லது பிரிந்து விடுவார்கள். எனவே ஆதரவாளர்கள் தேர்தல் என்ற போதை அடங்கி;, சுய நினைவுக்கு திரும்புகி;ன்ற போது தமது வெட்கம்கெட்ட செயலை எண்ணி உள்ளுக்குள் வெட்கப்பட வேண்டிய நிலை உருவாகும்.

இந்த தேர்தலில் இல்லாவிட்டாலும் அதற்குப் பிறகாவது இலங்கை அரசியலில் சிறியதும் பெரியதுமான மாற்றங்கள் நிகழத்தான் போகின்றது. அது என்னவென்று நம்மால் இப்போது முன்கணிக்க முடியாது. எனவே எல்லாச் சூழ்நிலைகளுக்கும் முகம்கொடுக்கக் கூடியவாறான நடைமுறை ஒன்றை பொதுவாக நாட்டு மக்களும், விசேடமாக முஸ்லிம் சமூகமும் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

தேர்தல் காலத்தில் யாருக்காவும், எந்தக் கட்சிக்காகவும், எந்தத் தலைவருக்காகவும் மக்கள் இன்னுமொரு தரப்புடன் முரண்படத் தேவையில்லை. நாம் சண்டைபிடித்து ஆதரவு தேடுமளவுக்கு தகுதியுள்ள அரசியல் கட்சிகளும் இலங்கையில் இல்லை.

அதனையும் மீறி மக்களும் ஆதரவாளர்களும் இத்தேர்தல் காலத்தில் வெட்ககரமான, அநாகரிகமான காரியங்களில் ஈடுபட்டால், எல்லா ஆட்டங்களும் முடிந்த பிறகு வெட்கம்கெட்ட தனமாகவே இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டியிருக்கும். இதுதான் ஒவ்வொரு தேர்தலிலும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில்; மட்டுமன்றி. சமூகத்திலும் நடக்கின்றது.

நாம் உண்மையில் நாட்டில்; ‘கட்டமைப்பு’ அல்லது ‘முறைமை’ மாற்றம் ஒன்றை வேண்டி நிற்கின்றோம் என்றால், அது மக்கள் பிரதிநிதிகளை மாற்றுவது மட்டுமன்றி, நமது அரசியல் பண்புகளை மாற்றுவதிலும் இருந்து தொடக்கி வைக்கப்பட வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

மனதை வெல்வதே மகாவீரம். மனம் செல்லும் பாதையில் செல்வது பலவீனமாகின்றது.

சந்தோசங்களுக்கு மனிதர், தங்களை மறக்கிறார்கள். கவலை வந்ததும் மனம் உடைந்து போகின்றார்கள். எவரும் திடமான மனோ நிலையில் வாழ்வதும் இல்லை. நெஞ்சத்தைத் தளரவிடுவது, தேகத்தை இம்சை செய்வது போலாகும்.

வாழ்க்கையில் நடப்பவை எல்லாமே நிகழ்வுகள் தான். அவை மாறிமாறி வந்துபோகும். எவருமே தப்பித்துப் போகமுடியாது. எங்களுக்கு மட்டும், எங்களுக்கு வேண்டியபடி, இயற்கை புதிதான சட்டம் அமைக்காது.

மரணம் மாந்தர்களுக்கு மட்டுமல்ல; சகல உயிர்களுக்கும் பொதுவானது. கடவுள் பேதமறவே உலகை இயக்குகின்றார்.

அறிவு, புத்தியுடன் வாழ்பவர்கள் கூட, மயக்க நிலையில் வாழ்க்கையை நடத்துகிறார்கள். உலகத்துக்குள் நுளைந்தாலே, அது பாரதூரமானது என எண்ணவேண்டாம்.

அனுபவ ஞானம் பெ, காலம் வழிசொல்லும். எனினும், துணிந்தவர்கள் நிம்மதியுடன் வாழ்கின்றனர்; அஞ்சுவதில்லை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### 30 மீற்றர் வீதியை திருத்த 3 கிழமைகள்



வவுனியா சோயோ ஒழுங்கையின் வீதி திருத்தப்பணிகள் மிகதாமதமாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

700 மீற்றர் தூரம் கொண்ட சோயோ வீதியை செப்பனிட்டு தருமாறு, நகரசபையிடம் பல தடவைகள் கோரிய போதிலும் நகரசபை அசமந்தமாக இருந்ததுடன் கடந்த மூன்று கிழமைகளுக்கு முன்னர் பணிகளை ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில் மூன்று வாரங்கள் கடந்துள்ள போதும், 30 மீற்றர் வீதியே செப்பனிடப்பட்டுள்ளது. செப்பனிடப்பட்ட வீதியும் பள்ளம் மேடாக காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

வீதியை சீராக செப்பனிட வேண்டும் என்ற சிந்தனையிலாமல் கனரக வாகனத்தின் ஊடாக பழைய வீதியை கிளறியதன் பின்னர் அதன் மேல் சிறிதளவு கற்களே போட்டு தார் ஊற்றுகின்றனர். இது நீண்ட காலத்திற்கு பயனுள்ளதாக இருக்காது.

எமது வட்டார உற்ப்பினர்கள் இது தொடர்பில் அக்கறையில்லை என தெரிவித்ததுடன் தமது வட்டாரத்தில் நகரசபை தலைவர் உட்பட தமிழரசுக்கட்சியை சேர்ந்த நகரசபை உறுப்பினர்கள் இருவர் இருக்கின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள மக்கள், இதுவரையிலும் முறையாக செப்பனிடப்படாத வீதியை தற்போதேனும் சீராக செப்பனிட்டு தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

க. அகரன்

தெலுங்கானா

# பணத்தை வீதியில் கொட்டிச்சென்ற கொள்ளையர்கள்

தெலுங்கானா மாநிலம், ஜக்தியால் மாவட்டத்தில் உள்ள கொருட்லா நகரில் நேற்றுமுன்தினம் (15) அதிகாலை நான்கு பேரைக் கொண்ட கும்பலொன்று, அப்பகுதியில் உள்ள ஏ.டி.எம் இயந்திரத்தை உடைத்துக் கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ATM யில் இருந்து எச்சரிக்கை மணி, ஒலித்ததை அடுத்து சம்பவ



இடத்திற்கு விரைந்த பொலிஸார், காரில் தப்பிச் செல்ல முயன்ற கொள்ளையர்களைத் தடுத்து நிறுத்த முயன்றபோதும், கொள்ளையர்கள் காரை நிறுத்தாமல், பணத்தை வீதியில் வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தவகையில் மொத்தமாக இந்திய மதிப்பில் சுமார் 19 லட்சம் ரூபாய் நாணயத் தாள்கள் வீதியில் வீசப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் கொள்ளையர்களைப் பிடிக்க தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை



## கரப்பான் கறி தோசை; யூடியூப்பர்களை வறுத்தெடுக்கும் மக்கள்

யூடியூப்பர்களால் `கடல் உணவின் சொர்க்கம்` என வர்ணிக்கப்பட்ட சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள பிரபல உணவகமொன்றில், இறால் கறிதோசை கேட்ட வாடிக்கையாளருக்கு, கரப்பான் கறி தோசை வழங்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று பெண்ணொருவர் தனது கணவருடன் குறித்த உணவகத்திற்கு உணவருந்தச்சென்றுள்ளார். அங்கு 350 ரூபாய் விலையுள்ள இறால் கறி தோசை ஓர்டர் செய்த இருவரும் அதனை ஆர்வத்துடன் உண்டுகொண்டு இருந்துள்ளனர்.

இதன் போது குறித்த தோசைக்குள் இருந்து, இறந்த கரப்பான் பூச்சியொன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இருவரும், இது குறித்து உணவக நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளனர்.

இதனைச் சற்றும் எதிர்பாராத உணவகம், தமது தவறை உணர்ந்து தங்களை மன்னித்துக் கொள்ளுமாறு இருவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து கரப்பான் தோசை தவிர்த்து ஏனைய உணவுகளுக்கு மாத்திரம் பணம் செலுத்திவிட்டு இருவரும் சென்றுள்ள நிலையில், அப்பெண்ணுக்கு தொடர்ந்து வாந்தியும்,வயிற்று வலியும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனக்கு நேர்ந்ததைப் போல், வேறு யாருக்கும், இது போன்ற பாதுகாப்பற்ற முறையில் தரமற்ற உணவு பரிமாறப்படக்கூடாது என்பதற்காக இச்சம்பவம் தொடர்பில் வீடியோக் காட்சியொன்றை தனது முகநூலில் அப்பெண் வெளியிட்டுள்ளார்.

அதில் 'குறைந்த பட்சம் மாதம் ஒரு முறையாவது உணவு பொருள் பாதுகாப்பு அதிகாரிகள் ஒவ்வொரு உணவகத்திற்கும் நேரடியாக சென்று ஆய்வு செய்து அதன் தரத்தை உறுதி செய்ய வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் குறித்த உணவகத்தில் வழங்கப்படும் உணவுகள் சிறப்பாகவும், தரம் வாய்ந்ததாகவும் இருப்பதாக நற்சான்றிதழ் வழங்கிய இர்பான் உள்ளிட்ட பிரபல யூடியூப்பர்களை மக்கள் இணையத்தில் வறுத்தெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புது டெல்லி

## நாய் குட்டிகளை ஈன்றதால் ஆசிட் வீச்சு

புதுடெல்லியில், நாய் வளர்ப்புத் தொடர்பாக எழுந்த தகராறில், அயலவர் மீது மூவர் ஆசிட் வீசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



உத்தம் நகரில், 50 வயதான நபர் ஒருவர் நாயொன்றை வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில் குறித்த நாயானது கடந்த சில நாட்களுக்கு முன்னர் குட்டிகளை ஈன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று குறித்த நபரின் நாய், குட்டிகளை ஈன்றமை தொடர்பாக அவரது அயலவரான கமல் மற்றும் அவரது மகன்கள் இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆத்திரமடைந்த கமல், கழிவறையை சுத்தம் செய்யப் பயன்படுத்தும் ஆசிட்டை தனது வீட்டின் மாடியிலிருந்து மீது வீசியதாகவும், இதில் நாய் உரிமையாளர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கமல் ஆசிட் வீசும் காட்சியானது அப்பகுதியில் இருந்த சிசிடிவி கமெராவில் பதிவாகியுள்ள நிலையில், அக் காட்சியை அடிப்படையாக வைத்து பொலிஸார் கமல் மற்றும் அவரது மகன்கள் இருவரையும் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம்

## சிறுமியைக் கடத்தி கூட்டுப்பாலியல் வன்புணர்வு

### இருவர் கைது

சிறுமியைக் கடத்திச் சென்று இருவர் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்த சம்பவம் உத்தரபிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் மௌவில் பகுதியைச் சேர்ந்த சகோதரர்களான இருவர்," தங்களது ஆசைக்கு இணங்காவிட்டால் மாந்திரீகத்தின் மூலம் உன் வீட்டிற்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறி " குறித்த சிறுமியை வன்கொடுமை செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து அறிந்த பொலிஸார் பாதிக்கப்பட்ட அச்சிறுமியை மீட்டுள்ளதோடு, வன்கொடுமை செய்த இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம்

## மனைவிக்கு முத்தம் கொடுத்த நபரால் பரபரப்பு

பொது இடத்தில் வைத்து,தனது மனைவிக்கு முத்தமிட்ட நபரை கும்பலொன்று சரமாரிய தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம், சரயு நதியில் மனைவியுடன் குளித்துக் கொண்டிருந்த குறித்த நபர், தனது மனைவிக்கு முத்தமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பார்த்து அதிர்சியடைந்த அப்பகுதி மக்கள், குறித்த நபரை தனியே இழுத்துச் சென்று சரமாரியாக தாக்கியுள்ளனர்.

அதேசமயம் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இத்தாக்குதலானது எப்போது நடைபெற்றது? என்பது குறித்த தகவல் வெளியாகாத நிலையில், இது குறித்தமேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை

## 91 வயதில் 14 கி.மீ சைக்கிள் ஓட்டி

### பொங்கல் சீர்செய்த தந்தை

91 வயதிலும் தந்தை ஒருவர், சுமார் 14 கிலோமீற்றர் தூரம் சைக்கிளிலேயே சென்று, தனது மகளுக்கு பொங்கல் சீர்செய்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகே உள்ள வடக்கு கொத்தகோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் செல்லத்துரை. இவருக்கு அமிர்தவள்ளி என்ற மனைவியும் சுந்தராம்பாள் என்ற மகளும் உள்ளனர்.

மகளுக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர், அவர் திருமணம் செய்து வைத்துள்ள நிலையில்,12 ஆண்டுகள் கழித்து அவருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேரக்குழந்தைகள் மீது கொண்ட அளவு கடந்த பாசத்தால் தொடர்ச்சியாக 9 ஆண்டு காலமாக ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் பண்டிகையின் போது சைக்கிளில் சென்று பொங்கல் சீர் வழங்குவதை அவர் வாடிக்கையாகக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்த ஆண்டும், தேங்காய், பழம், மஞ்சள் கொத்து, வேட்டி, சேலை, துண்டு , பூ, பச்சரிசி,



வெள்ளம் ஆகியவற்றுடன் ஐந்து கரும்புகளை தலையில் வைத்து, பிடிக்காமலே கொண்டு செல்லதுரையின் சைக்கிள் பயணம் மகளின் வீட்டை நோக்கிப் பயணம் செய்துள்ளார். இந்நிலையில் "தான் உயிரோடு இருக்கும் வரை சைக்கிளில் வந்து பொங்கல் சீர் வழங்குவேன்" என அவர் தெரிவித்துள்ளமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


# அரசியலில் குதிக்கின்றாரா 'துணிவு' நடிகை



அஜித் நடித்த 'துணிவு' திரைப்படத்தில் நடித்த மஞ்சு வாரியார் லேடி சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்தை பெரும் வகையில் அதிரடி ஆக்சன் காட்சிகளில் நடித்திருந்தார்.

இந்த நிலையில் பேட்டியளித்த மஞ்சு வாரியார் 'தான் அரசியலில் சேர இருப்பதாக ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் வதந்திகள் வரும், ஆனால் தனக்கு அரசியலில் எந்த விதமான ஆர்வமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டு தனக்கு 'துணிவு' பொங்கல் என்றும் அஜித்துடன் நடித்தது தனக்கு பெருமை என்றும் அவர் கூறியுள்ளார். அஜித்துடன் லடாக் சென்றது மிகவும் மகிழ்ச்சியான அனுபவம், அவர் பைக் பயணத்தை சண்டிகாரில் தொடங்கி மணாலி, லே, லடாக் வரும்போதுதான் அவருடன் நான் இணைந்தேன், நிறைய பேசினோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.அஜித் மிகவும் எளிமையானவர், மனதில் பட்டதை சொல்பவர், அவரை பார்த்து நிறைய கற்றுக் கொண்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.




## 'ஜப்பான்' கார்த்தி

**இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படம் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் உருவாகி வருகிறது**

கார்த்தி நடித்த 'பொன்னியின் செல்வன்' மற்றும் 'சர்தார்' ஆகிய இரண்டு திரைப்படங்கள் வெளியாகி நல்ல வரவேற்பு பெற்ற நிலையில் தற்போது அவர் 'ஜப்பான்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இயக்குனர் ராஜூ முருகன் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படம் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் உருவாகி வருகிறது.

இந்த நிலையில் பொங்கலை முன்னிட்டு 'ஜப்பான்' படத்தின் போஸ்டர் வெளியாகி உள்ள நிலையில் இந்த போஸ்டரில் கார்த்தி இதுவரை இல்லாத வகையில் வித்தியாசமான தோற்றத்தில் இருப்பதை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

ஜிவி பிரகாஷ் இசையில், ரவிவர்மன் ஒளிப்பதிவில், பிலோமின் ராஜ் படத்தொகுப்பில், அன்பறிவு ஸ்டாண்ட் இயக்கத்தில் இந்த படம் உருவாகி வருகிறது. கார்த்தியின் 25வது படமான இந்த படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

## நடிகைக்கு சோதனை

விஷால் நடித்த 'சிவப்பதிகாரம்' என்ற திரைப்படத்தில் நாயகியாக நடித்தவர் நடிகை மம்தா மோகன் தாஸ். அதன் பிறகு அவர் 'குசேலன்' 'குரு என் ஆளு' 'தடையறத் தாக்க' 'எனிமி' உள்ளிட்ட படங்களில் நடித்தார்.

இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மம்தா மோகன் தாஸ் அதற்கான சிகிச்சை மேற்கொண்டு தேறினார். இந்த நிலையில் தற்போது அவருக்கு திடீரென விட்டிலிகோ (Vitiligo) என்ற நோய் தன்னை தாக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நோய் தோலின் நிறத்தை இழக்க செய்யும் வகையை கொண்டது என்றும், எனவே தான் கொஞ்சம் கொஞ்சமாக நிறத்தை இழந்து வருவதாக அவர் குறிப்பிட்டு புகைப்படம் ஒன்றை பதிவு செய்துள்ள நிலையில் அந்த புகைப்படத்தை பார்த்து ரசிகர்கள் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளனர்.

மேலும் அவர் தன்னம்பிக்கையுடன் இந்த நோயை தான் எதிர்கொண்டு வருவதாகவும் சிகிச்சையின் பின் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மம்தா மோகன் தாஸின் இந்த இன்ஸ்டாகிராம் பதிவிற்கு அவரது நண்பர்கள் மற்றும் ரசிகர்கள் ஆறுதல் கூறி வருகின்றனர்.



**தான் கொஞ்சம் கொஞ்சமாக நிறத்தை இழந்து வருவதாக மம்தா மோகன் தாஸின் குறிப்பிட்டு புகைப்படம் ஒன்றை பதிவு செய்துள்ள நிலையில் அந்த புகைப்படத்தை பார்த்து ரசிகர்கள் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளனர்.**

## வாரிசு நடிகை மூன்றாவது திருமணமா?


இந்திய திரையுலகில் பிரபல நடிகையாக வலம் வருபவர் நடிகை ஜெயசுதா. இவர் வம்சி இயக்கத்தில் கார்த்திக்கு அம்மாவாக தோழா படத்தில் நடித்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து தற்போது தளபதி விஜய் நடிப்பில் வெளியான வாரிசு படத்தில் விஜய்க்கு அம்மாவாக நடித்துள்ளார். தற்போது 64 வயதாகும் இவருக்கு இரண்டு திருமணங்கள் நடந்து விவாகரத்து பெற்று தனியாக வாழ்ந்து வருகிறார்.

இப்படியான நிலையில் தற்போது இவர் வெளிநாட்டை சேர்ந்த ஒருவரை மூன்றாவது திருமணம் செய்து கொண்டதாக தகவல் பரவி வந்தது. மேலும் இவர் வாரிசு இசை வெளியீட்டு விழாவில் வெளிநாட்டு நபருடன் பங்கேற்றதும் இந்த பேச்சுக்கு காரணமாக அமைந்தது.

இப்படியான நிலையில் இது குறித்து ஜெயசுதா விளக்கம் அளித்துள்ளார். தனது வாழ்க்கை வரலாற்றை அவர் படமாக்க உள்ளதால் தன்னுடன் பயணித்து வருவதாக தெரிவித்துள்ளார்.





## மீண்டும் டைட்டானிக்

ஹொலிவுட் திரை உலகில் பிரபல இயக்குநராக வலம் வரும் ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் வெளியான அவதார் 2 திரைப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில் இவர் இயக்கத்தில் 1997 ஆம் ஆண்டில் லியானர்டோ டிகாப்ரியா மற்றும் கேட் வின்ஸ்லெட் நடிப்பில் காதல் காவியமாக வெளியான டைட்டானிக் திரைப்படத்தின் ரீ- ரீலீஸ் குறித்த தகவல் வெளியாகி வைரலாகி வருகிறது.

அதாவது, டைட்டானிக் திரைப்படம் வெளியாகி 25 ஆண்டுகள் நிறைவு பெற்றிருப்பதை கொண்டாடும் வகையில் வரும் பெப்ரவரி 10ஆம் திகதி 3d மற்றும் 4k தொழில்நுட்பத்தில் ஹை ஃப்ரேம் ரேட்டில் ரீ மாஸ்டர் செய்து மீண்டும் திரையரங்குகளில் ரிலீஸ் செய்ய இருப்பதாக பட குழு தெரிவித்து இருக்கிறது.

காதலர் தின மாதத்தில் காதலர்களுக்கு விருந்தாக வெளியாக இருக்கும் இப்படம் குறித்த அப்டேட் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்து இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.



ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

# இலங்கையை வெள்ளையடித்த இந்தியா

இலங்கையை ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இந்தியா வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்து 3-0 என இலங்கையை வெள்ளையடித்தது.

இதேவேளை இப்போட்டியில் 317 ஓட்டங்களால் இந்தியா வென்ற நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களால் பெறப்பட்ட வெற்றி இதுவாகும். முன்னதாக, அயர்லாந்துக்கெதிராக கடந்த 2008ஆம் ஆண்டு நியூசிலாந்து 290 ஓட்டங்களால் வென்றதே சாதனையாகக் காணப்பட்டிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 390/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 166 (110), ஷுப்மன் கில் 116 (97), றோஹித் ஷர்மா 42 (49), ஷ்ரேயாஸ் ஐயர் 38 (32) ஓட்டங்கள்)

இலங்கை: 73/10 (22 ஓவ. ) (பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/32, குல்டீப் யாதவ் 2/16, மொஹமட் ஷமி 2/20)

போட்டியின் நாயகன்: விராட் கோலி

தொடரின் நாயகன்: விராட் கோலி




# சம்பியனானது ஓஸியன் 2010 அணி

அஸ்ஹர் இப்றாஹிம்

ஓட்டமாவடி பதுரியா-மாஞ்சோலை அல் இஹ்ஸான் விளையாட்டுக் கழகம் நடாத்திய பிரதேச பாடசாலை பழைய மாணவர் அணியினர்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் ஓஸியன் 2010 அணி சம்பியனானது.

29 பழைய மாணவர்கள் அணிகள் பங்கு கொண்ட இத்தொடரில், மாஞ்சோலை அல்-ஹிறா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மீராவோடை ஹிதாயன்ஸ் 2025 அணியை வென்று ஓஸியன் 2010 அணி சம்பியனானது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக அணித்தலைவர் மார்டின் ஒடெகார்ட் ஒரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.




ஸ்பானிய சுப்பர் கிண்ணம்:

# சம்பியனானது பார்சிலோனா

ஸ்பானிய சுப்பர் கிண்ணத் தொடரில் லா லிகாவில் கடந்த பருவகாலத்தில் இரண்டாமிடம் பெற்ற பார்சிலோனா சம்பியனானது. சவுதி அரேபியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில், நடப்பு லா லிகா சம்பியன்களான றியல் மட்றிட்டை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றே பார்சிலோனா சம்பியனானது.

பார்சிலோனா சார்பாக, கவி, றொபேர்ட் லெவன்டோஸ்கி, பெட்ரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மட்றிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கரிம் பென்ஸீமா பெற்றிருந்தார்.



பிரெஞ்சு லீக் 1 தொடர்:

# தோற்ற நடப்புச் சம்பியன்கள்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், ஸ்டேட் றெனிஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் தோற்றது.

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு பிரிவினர் வெற்றி

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி நாரஹேன்பிட்டி ஷாலிகா மைதானத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்றது.இந்த போட்டிக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண அலுவலகங்கள் மற்றும் அதிகார சபையின் பல்வேறு திணைக்களங்களின் ஏராளமான விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். அங்கு வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு பிரிவின் விளையாட்டு வீர, வீராங்கனைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத்துடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

மே இது



ஆப்கானிஸ்தான்

# முன்னாள் பெண் எம்.பி. சுட்டுக் கொலை

ஆப்கானிஸ்தா-னில் முன்னாள் பெண் எம்.பி ஒருவரை மர்ம நபர்கள் சிலர் சுட்டுக் கொலைசெய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் , தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பூங்காக்களுக்குச் செல்வதற்கும், உயர் கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடை விதித்திருந்தமை சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்து.



அதேசமயம் அங்கு வன்முறை சம்பவங்களும், படுகொலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஆதரவு அரசாங்கத்தில் எம்.பி.யாக இருந்த ' முர்சால் நபிஜாதா ' என்ற பெண்தலைவரும், அவரது பாதுகாவலரும் காபூலில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம்(15) மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




கனடா

# 'பொங்கல் வாழ்த்துத் தெரிவித்த கனடா பிரதமர் ட்ரூடோ

தமிழர்களால் நேற்று முன்தினம் (15) பொங்கல் பண்டிகையானது கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் பொங்கல் பண்டிகை முன்னிட்டு கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழர்களுக்கு 'தை பொங்கல்' வாழ்த்து தெரிவித்து வீடியோவொன்றை வெளியிட்டார்.

அதில் , " கனடா உட்பட உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் அறுவடைத் திருநாளான தைப் பொங்கலைக் கொண்டாடுகின்றனர்.

இந்த வருடாந்த பண்டிகையின் போது, குடும்பமும் அன்புக்குரியவர்களும் கூடி, வருடத்தின் அபரிமிதமான அறுவடைக் காலத்திற்காக இயற்கைக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இது தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதற்கான ஒரு வாய்ப்பாகும், "எங்கள் குடும்பத்தின் சார்பாக, சோஃபியும் நானும் தைப் பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும், கனடாவிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் அமைதி மற்றும் நல்ல ஆரோக்கியத்திற்காக எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். "இனிய தைப் பொங்கல் வாழ்த்துகள்" எனத் தெரிவித்துள்ளார்.



லண்டன்

# நடுவானில் காதலிக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த இளைஞர்

நடுவானில் வைத்து தனது வருங்கால மனைவிக்கு இளைஞர் ஒருவர் இன்ப அதிர்ச்சி கொடுத்த சம்பவம் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

கடந்த 2ஆம் திகதி லண்டனிலிருந்து ஹைதராபாத் வழியாக மும்பைக்கு ஏர் இந்தியா விமானம் ஒன்று பயணித்துள்ளது.

குறித்த விமானத்தில் தனது வருங்கால மனைவி, பயணம் செய்யவுள்ளார் என்பதை தனது நண்பர் மூலம் அறிந்து கொண்ட இளைஞர் ஒருவர், அதே விமானத்தில் தனக்கும் டிக்கெட் புக்கிங் செய்துள்ளார்.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று, விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, திடீரென எழுந்து தனது காதலியின் இருக்கை அருகே சென்ற இளைஞர், அவர் முன்பு மண்டியிட்டு தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

அதைப் பார்த்து அதிர்ச்சியும் ஆனந்தமும் அடைந்த அப்பெண், இளைஞரை ஆரத்தழுவிக் கொண்டார்.

இந்த நெகிழ்ச்சியான சம்பவமானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

# லொறியின் பின்னால் ஓடும் மக்கள்

கடந்த சில ஆண்டுகளாகப் பாகிஸ்தான் அரசானது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

குறிப்பாக அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தானின் முக்கிய உணவான கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அந்நாட்டு மக்கள் கடுமையான உணவு பற்றாக்குறையை எதிர் கொண்டு வருகின்றனர் .

இந்நிலையில் பாகிஸ்தானில் கோதுமை மூட்டைகளை கொண்டு செல்லும் லொறி ஒன்றை நூற்றுக்கணக்கானோர் துரத்தி செல்லும் வீடியோவானது சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.



அமெரிக்கா

# பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றார் 'ஆர்'போனி கேப்ரியல்

அமெரிக்காவின் லூசியானாவின் நியூ ஆர்லியன்ஸ் நகரில் 71ஆவது பிரபஞ்ச அழகிப் (மிஸ் யுனிவர்ஸ் 2022) போட்டியானது அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் 2022 ஆவது ஆண்டுக்கான பிரபஞ்ச அழகி பட்டத்தை அமெரிக்காவின் ஆர்'போனி கேப்ரியல் கைப்பற்றினார்.

இப் போட்டியில் 86-க்கும் மேற்பட்ட பெண்கள் பங்குபற்றியிருந்த நிலையில் வெனிசுலாவின் டயானா சில்வா 2ஆவது இடத்தையும், டொமினிகன் குடியரசின் அமி பெனா 3ஆவது இடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

அதேசமயம் இந்தியா சார்பாக போட்டியிட்ட திவிதா 'சோன் சிரியா' 16 ஆவது இடத்தைக் கைப்பற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

# அந்தவகை பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை

`ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருட்களை` வரும் ஒக்டோபர் மாதத்திலிருந்து தடை செய்யவுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

இத்தகைய பிளாஸ்டிக் பொருள்கள் சுற்றுச்சூழலுக்கு பாரிய பாதகத்தை ஏற்படுத்துவதனாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 17 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.